பாடம் - 23

# தேவனுடைய தெய்வீகத் திட்டம்

திரித்துவம் - பாகம் 2

# தேவகுமாரன் இயேசு






## TRINITY -SON OF GOD JESUS PART-2

For Further Details : Email us : baskar_harvest@yahoo.co.in, baskarharvest@gmail.com
Phone : 97886 19229, 93641 50005

## திரித்துவம் - பாகம்2

# தேவனுடைய குமாரன் - இயேசு



கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளே

கடந்த பாடத்தில் திரித்துவம் குறித்தும் அதில் ஒரு பாகமாக பரிசுத்த ஆவி குறித்தும் விரிவாக ஆராய்ந்தோம்.

திரித்துவம் என்றோ, திரியேக தேவன் என்றோ அல்லது திரித்துவக் கொள்கையோ தேவனுடைய வேதத்தில் இல்லை என தெளிவாக பார்த்ததுடன் பரிசுத்தஆவி தேவனுடைய வல்லமை அல்லது சக்தியே தவிர தனி நபரல்ல என தேவகிருபையினால் ஆராய்ந்தோம்.

ஆக மூவர் அல்ல மாறாக இப்போது பிதா குமாரன் என இருவரே உள்ளனர். இப்பாடத்தில் குமாரன் பற்றி வேத வசனங்கள் போதிப்பதை ஆராய்வோம்.

**யோவான் 10:30**

**"நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்"**

என்றார். இதன்பொருள் என்ன?

இருவரும் ஒரே நபரா? ஒரு சரீரத்துக்குள் இன்னொருவர் புகுந்து உள்ளனரா? இவர் தமிழில் பிதாவாகிய இயேசு" எனும் அர்த்தத்தில் "யேசப்பா" எனறழைக்கப்படுவதை காண்கிறோம். மேலும் இவ்வசனத்தில் இருவரைப் பற்றி மட்டுமே பேசப்பட்டுள்ளதை கவனிக்க தவறக்கூடாது. "ஒன்றாயிருக்கிறோம்" என்பதன் வேதத்தின்படியான பொருளை நாம் அறியவேண்டும். வேதத்தில் ஒரு விஷயத்தின் பொருளை அறிந்துகொள்ள வேண்டுமெனில் வேதத்திலிருந்தே கண்டுபிடித்துவிடலாம். இயேசு பேசியிருக்கிற ஒருமையைக் குறித்து அவரே விளக்குகிறார்

**யோவான் 17: 21,11**

**"அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்கள் எல்லோரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்கிறேன்"**

**"பரிசுத்தபிதாவே, நீர் எனக்குத் தந்தவர்கள் நம்மைப்போல ஒன்றாயிருக்கும்படிக்கு, நீர் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொள்ளும்"**

பிதாவுக்கும் குமாரனுக்கும் சபைக்குமிடையே உள்ள "ஒருமை" - சிந்தையில் அல்லது சித்தத்தில் ஏற்படுவதாகும்.

இதன்மூலம் பிதாவும் குமாரனும் ஒரே ஆளாக இருப்பதாகக் கொண்டால் சீஷர்களை எவ்வாறு எடுத்துக்கொள்வது? ஆக இவ்வசனத்தின் கருப்பொருளைக் காண்போமானால் இருவரும் ஒரே நோக்கத்தில் ஒரே சித்தத்தில் ஒரே எண்ணத்தில் இருக்கிறார்கள் என்று புரிந்துகொள்வதே நம் அறிவுக்கு ஏற்புடையதாகுமே தவிர, இருவரும் ஒரே ஆள் என எடுத்துக்கொண்டால் எவ்வாறு பொருந்திவரும்? உதாரணமாக

**ஆதியாகமம் 2:24, எபேசியர் 2:31-**

**"மனுஷன் தன் மனைவியோடு இசைந்து இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள்"**

என்றால் ஒரே நோக்கத்தில், எண்ணத்தில், ஐக்கியமாக இருக்கிறார் என்றுதானே பொருள்படும். இவ்விதமாக இயேசுவும் பிதாவும் ஒன்றானவர்கள் அல்ல, மாறாக இரு தனிப்பட்ட நபர்கள் என்று புரிந்துகொள்கிறோம். இனி இருவருக்குமிடையில் உள்ள உறவைப் பற்றி பார்ப்போம்.இயேசு தன்னைப்பற்றிக் கூறும்போது,



**யோவான் 13:16**

**"ஊழியக்காரன் எஜமானிலும் , அனுப்பப்பட்டவன் தன்னை அனுப்பினவரிலும் பெரியவனல்ல"**

எனும்போது, பிதாவாகிய தேவன் இயேசுவை அனுப்பினார் என்று அறிகிறோம்.இயேசு தேவனுடைய தாசனாகிய நீதிபரர் என்று அவரே கூறுவதைக் காண்கிறோம்.

**ஏசாயா 53:11**

**"அவர் தனது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாவார், என் தாசனாகிய நீதிபரர் தம்மைப் பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார். அவர்களுடைய அக்கிரமங்களைத் தாமே.."**

**ஏசாயா 52:13**

**"இதோ, என் தாசன் ஞானமாய் நடப்பார், அவர் உயர்த்தப்பட்டு மேன்மையும் மகா உன்னதமுமாயிருப்பார்"**

**யோவான் 8:42**

**"நான் தேவனிடத்திலிருந்து வந்திருக்கிறேன். நான் சுயமாய் வரவில்லை, அவரே என்னை அனுப்பினார்"**

என்றால் அநேகர் இயேசு தாமே புறப்பட்டு உலகிற்கு வந்தார் என நம்புவது சத்தியமா?

**யோவான் 12:49**

**"நான் சுயமாய்ப் பேசவில்லை, நான் பேசவேண்டியது இன்னதென்றும் என்னை அனுப்பின பிதாவே எனக்குக் கட்டளையிட்டார்"**

ஆக, இயேசு தேவனுடைய ஊழியக்காரராக, பிதாவுக்குக் கீழானவராக இப்பூமிக்கு வந்தார் என்பதும், தேவனே தம்முடைய வார்த்தைகளை இயேசுவிடம் கொடுத்தார் என்பதும் சத்தியம் ஆகும்.

**யோவான் 14:28** **"என் பிதா பெரியவராயிருக்கிறார்"**
என்றால் இயேசு தன் பிதாவை தன்னிலும் மேம்பட்டவராக தெரிவிக்கிறார். 4 சுவிசேஷங்களை முழுமையாக படித்தால் பிதா இயேசுவிற்கு மேம்பட்டவரென்பது புதிதாக படிப்பவருக்குக்கூட புரிந்துவிடும். இப்படியிருக்க, பிதாவிற்கும் இயேசுவிற்கும் உள்ள சம்பந்தம் அல்லது உறவு என்னவென்று இயேசு பேசின வார்த்தைகளிலிருந்து வாசிப்போம்.

**வெளிப்படுத்தல் 3:14**

**"உண்மையும் சத்தியமுள்ள சாட்சியும், தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியுமாயிருக்கிற ஆமென் என்பவர் சொல்லுகிறதாவது".**

Read in KJV "Beginning of the Creation of God"

இங்கு இயேசுவே தன்னைப்பற்றிக்கூறும்போது, "தேவனுடைய சிருஷ்டியின் முதல் சிருஷ்டி" என்கிறார். அப்படியானால் பிதாவாகிய தேவன் அவரை சிருஷ்டித்தாரா? இதற்கு வேதத்தில் பல்வேறு இடங்களில் உள்ள ஆணித்தரமான ஆதாரங்களில் சிலவற்றைப் பார்ப்போம்.

**கொலேசெயர் 1:15**

**"அவர் அதரிசனமான தேவனுடைய தற்சொரூபமும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேருமானவர்"**

இவரே தேவனுடைய முதல் சிருஷ்டி. பிதாவாகிய தேவன் தன் சிருஷ்டிப்பு வேலையில் முதன்முதலில் ஆதாமுக்கு முன்பாக பரலோக தூதர்களுக்கு முன்பாகவும் , கேரூபீன்கள் சேராபீன்களுக்கு முன்பாகவும் எத்தனை கோடி ஆண்டுகள் என்பது நமக்குத் தெரியாது. அதற்கு முன்பாக நம் கர்த்தர் இயேசுவையே முதன்முதலில் நேரடியாக தாமே தம்முடைய சர்வ வல்லமையினால் சிருஷ்டித்தார்.

தேவதூதர்களும் தேவனுடைய குமாரர்கள் தானே. பின்பு இயேசுவை மாத்திரம் ஒரே பேறான குமாரன் என்றழைப்பது எவ்விதத்தில் சரியாகும்? இங்கு இயேசுவின் சிருஷ்டிப்பில் மறைந்திருக்கும் இரகசியமும் மகிமையும் வெளிப்படுகிறது.கர்த்தர் இயேசு கூறும்போது,

**வெளிப்படுத்தல் 22:13**

**"நான் அல்பாவும் ஒமேகாவும், ஆதியும் அந்தமும் முந்தினவரும் பிந்தினவருமாயிருக்கிறேன்"**

அல்பா என்பது கிரேக்க பாஷையின் முதல் எழுத்தும் ஒமேகா என்பது கடைசி எழுத்துமாகும்.

(கிரேக்க பாஷையில் மொத்தம் 24 எழுத்துக்கள் உள்ளன)

அதாவது தேவனுடைய நேரடியான சிருஷ்டிப்பில் நானே முதலும் கடைசியுமான சிருஷ்டி என்பதையே இவ்வசனம் தெளிவாக உரைக்கிறது.

**நீதிமொழிகள் 8:22-24**

**"கர்த்தர் தமது கிரியைகளுக்குமுன் பூர்வமுதல் என்னைத் தமது வழியின் ஆதியாகக் கொண்டிருந்தார். பூமி உண்டாகுமுன்னும், ஆதிமுதற்கொண்டும் அநாதியாய் நான் அபிஷேகம் பண்ணப்பட்டேன். ஆழங்களும் ஜலம் புரண்டுவரும் ஊற்றுகளும் உண்டாகுமுன்னே நான் ஜெனிப்பிக்கப்பட்டேன்"**

பிதாவும் இயேசுவும் மாத்திரமே அச்சமயத்தில் இருந்தனர் என்பது புலனாகிறது.
ஆனால் கர்த்தராகிய இயேசுவை சிருஷ்டித்தபின்பு தேவன் பரலோகத்திலும் பூலோகத்திலும் எல்லாக் காரியங்களையும் இயேசுவைக் கொண்டு சிருஷ்டித்தார்.

**யோவான் 1:3**

**"சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று. உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை"**

பரலோகத்திலும் பூலோகத்திலும் தேவன் சிருஷ்டித்த அனைத்துக்கும் தலைமை சிற்பியாக இருந்தவர் இயேசுவே.

**நீதிமொழிகள் 8:30**

**"..நான் அவர்அருகே செல்லப்பிள்ளையாயிருந்தேன்"**

அதாவது "செல்லப்பிள்ளை" என்பதை ஆங்கில வேதாகமம் NIV -ல் படித்தால், 'Craftsman' -அதாவது தேவனுக்கு அருகில் எல்லாவற்றையும் உருவாக்கும் "சிற்பி" என வருவதை அறியவும்.

பிதாவானவர் தம்முடைய சிருஷ்டிப்பின் வல்லமையை இயேசுவின்மூலமாக செய்தார்.

**எபிரேயர் 1:1,2**

**"இவரைக்கொண்டு உலகங்களை உண்டாக்கினார்"**

என வாசிக்கிறோம். மேலும் கர்த்தராகிய இயேசுவின் மகிமையைக் குறித்து ,

**எபிரேயர் 1:5**

**"எப்படியெனில், நீர் என்னுடைய குமாரன் இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன் என்றும், நான் அவருக்கு பிதாவாயிருப்பேன். அவர் எனக்கு குமாரனாயிருப்பார் என்றும் அவர் தூதர்களில் யாருக்காவது எப்போதாகிலும் சொன்னதுண்டோ?"**

எனும்போது, கர்த்தராகிய இயேசு ஒருவரே தேவனுடைய சிருஷ்டிப்பில் எல்லாம் விசேஷமான கிரியை என்று தெளிவாகத் தெரிகிறது. தேவதுாதர்கள் அனைவரும் பிதாவின் வல்லமையினால் இயேசு மூலம் சிருஷ்டிக்கப்பட்டனர்.

யோவான் சுவிசேஷத்தில் மாத்திரம் கர்த்தராகிய இயேசு 100 முறைக்கும் மேலாக "பிதா" என்று அழைக்கிறார்.

**கொலோசெயர் 1:16**

**"சகலமும் அவரைக்கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது"**

எப்பேர்ப்பட்ட மகிமையை நம் கர்த்தர் அப்போதே பெற்றிருந்தார் என்பது நமக்கு மிகுந்த ஆனந்தத்தைத் தருகிறது. அகிலம் முழுவதும் அதில் உயிருள்ள எல்லா சிருஷ்டிகளும்(தூதர்கள், மனிதர்கள், மிருகங்கள், பூச்சிகள், பறவைகள், மச்சங்கள் முதலியன) அவருக்காகவே படைக்கப்பட்டிருக்கிறது. எப்பேர்ப்பட்ட மகிமை என்றால்

**யோவான் 1:14**

**"அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது"**

அதாவது சர்வவல்ல பிதாவிற்கு அடுத்த ஸ்தானம் அது மிகவும் உன்னதமான மகிமை என்று பார்க்கிறோம்.

அவ்வாறிருக்க கர்த்தருக்கு மூன்று பிறப்புகள் இருந்தன.

1. முதன்முதலில் பரலோக தேவன் அவரை நேரடியாக சிருஷ்டித்தபோது அழியக்கூடிய ஆவிக்குரிய ஜீவியாக இருந்தார்(வெளிப்படுத்தல் 3:14, கொலேசெயர் 1:15, யோவான் 1,1)
2. பின்பு மரியாள் வயிற்றில் மனிதனாக பிறந்தபோது(லூக்கா 1:31, கலாத்தியர் 4:4). இவ்விருமுறையும் கர்த்தர் அழிவுக்குரிய(Mortal) சுபாவத்தில் பிறந்தார்
3. ஆனால் அவர் மரித்து உயிர்த்தெழுந்தபோது, திவ்விய சுபாவத்தில் அழியாமையுள்ளவராக பிறந்தார்(வெளிப்படுத்தல் 1:18, யோவான் 5:26)

**எபிரேயர் 1:6**

**"அவரை மறுபடியும் உலகத்தில் பிரவேசிக்கச் செய்தபோது தேவதூதர்கள் யாவரும் அவரைத் தொழுதுகொள்ளக்கடவர்கள் என்றார்**

(தமிழில் "மறுபடியும்" என்கிற வார்த்தை தரப்படவில்லை)

ஆக அவர் ஒரேஒருமுறை மட்டும் கல்வாரியில் மரித்தார். மேலும்

**1கொரிந்தியர் 11:3**

**"ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து தலையாயிருக்கிறாரென்றும், ஸ்திரீக்குப் புருஷன் தலையாயிருக்கிறானென்றும், கிறிஸ்துவுக்கு தேவன் தலையாயிருக்கிறாரென்றும், நீங்கள் அறியவேண்டுமென்று விரும்புகிறேன்"**

**1கொரிந்தியர் 3:23**

**"நீங்கள் கிறிஸ்துவினுடையவர்கள், கிறிஸ்து தேவனுடையவர்"**

ஒவ்வொரு ஸ்திரீக்கும் புருஷன் தலையாகவும் புருஷனுக்கு கிறிஸ்து தலையென்றும், கிறிஸ்துவுக்கு தேவன் தலையாயிருக்கிறார் என்று பார்க்கிறோம்.

இனி திரித்துவ உபதேசத்திற்காக காண்பிக்கப்படும் சில வசனங்களை ஆராய்வோம்.

**யோவான் 1:1,2**

**"ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று. உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை"**

அன்பானவர்களே, இங்கு கிறிஸ்துவுக்கு ஒரு ஆதி அல்லது ஒரு துவக்கம் இருந்ததை கவனிக்கவேண்டும்.

**வெளிப்படுத்தல் 3:14** **"தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியுமாயிருக்கிற.."**

ஆனால் தேவன் ஆதியந்தமில்லாதவராக இருக்கிறார் என வாசிக்கிறோம் -

**சங்கீதம் 90:2** **"பர்வதங்கள் தோன்றுமுன்னும், நீர் பூமியையும் உலகத்தையும் உருவாக்குமுன்னும், நீரே அநாதியாய் என்றென்றைக்கும் தேவனாயிருக்கிறீர்"**

இவ்வகையிலும் இருவருக்கும் உள்ள வித்தியாசத்தை அறியலாம். மேலும் இவ்வசனத்தில் இருவரைப்பற்றி மாத்திரமே பேசப்பட்டுள்ளதே தவிர, திரித்துவ உபதேசத்தில் வரும் மூவரைப்பற்றி பேசப்படவில்லை.

ஆக, வார்த்தையாகிய கிறிஸ்துவுக்கு ஒரு ஆரம்பம் இருக்கிறது.
அதே வசனத்தில் "அந்த வார்த்தை தேவனாயிருந்தது என்றால், அந்த வார்த்தையே சர்வ வல்ல தேவனாயிருந்தது என சாதிக்க முற்படுகின்றனர். ஆனால் தேவனுடைய வசனத்தில் தேடி வாசிக்கவேண்டும்(**ஏசாயா 34:16**).

நமது கர்த்தராகிய கிறிஸ்து இப்பூமியில் தேவ சித்தத்தை முழுமையாக நிறைவேற்றி, பின் தேவனால் உயிர்த்தெழுப்பப்படும்(**எபிரேயர் 5:5**)போது,

**எபிரேயர் 1:8,9**

**"குமாரனை நோக்கி : தேவனே உம்முடைய சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது, உம்முடைய ராஜ்யத்தின் செங்கோல் நீதியுள்ள செங்கோலாயிருக்கிறது. நீர் நீதியை விரும்பி அக்கிரமத்தை வெறுத்திருக்கிறீர். ஆதலால் தேவனே உம்முடைய தேவன் உமது தோழரைப் பார்க்கிலும் உம்மை ஆனந்த தைலத்தினால் அபிஷேகம் பண்ணினார் "**

பிதாவாகிய தேவன் தம்முடைய குமாரனை நோக்கி,"தேவனே" என்று அழைக்கிறார் என்றால், நம் பரம பிதாவினுடைய தயாள குணத்தை நாம் எவ்வாறு போற்றுவது. மேலும் இவ்வசனத்தின்மூலம் நாம் மிகப்பெரிய சத்தியத்தைக் கண்டுபிடித்துவிடலாம். அதாவது இயேசு தேவனாயிருக்கிறார். ஆனால் அவருக்குமேல் அவருடைய தேவன் இருக்கிறார் என்பது தெள்ளத் தெளிவாக இருக்கிறது என்பதால் தேவனுடைய வேதத்தில் எவ்வித முரண்பாடும் இல்லை என்பது தெளிவாகிறது. ஏனெனில் தேவனுடைய ஒரே பேறான குமாரன் தேவனாயிருப்பதில் எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை.

இயேசுவே இதுபற்றி மரியாளிடம் கூறும்போது,

**யோவான் 20:17**

**"நீ என் சகோதரரிடத்திற்குப் போய், நான் என் பிதாவினிடத்திற்கும் உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனிடத்திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப்போகிறேன் என்றுஅவர்களுக்குச்சொல்லு"**

இவ்வசனத்தின் கருப்பொருளை நாம் அறியவேண்டும். அதாவது இயேசுவின் பிதாவே அவருடைய சீஷர்களின் பிதாவாகவும், இயேசுவின் தேவனை(கடவுள்) அவருடைய சீஷர்களின் கடவுளாயும் உள்ளதுடன், தன் சீஷர்களை "சகோதரர்" என்று குறிப்பிடுவதை கவனிக்கவும்.

பரம பிதா நம்மைப் பார்த்து சகோதரர் என்று கூப்பிடுவாரா? இதையும் கவனத்திற்கொள்ள மறக்கக்கூடாது.ஆக, இயேசு பரலோகத்தில் தூதர்கள் மற்றும் பூமியில் மனிதர்கள் எல்லோருக்கும் மூத்த சகோதரர் ஆகிறார்.

**எபிரேயர் 2:11**

**"பரிசுத்தஞ்செய்கிறவரும், பரிசுத்தஞ் செய்யப்படுகிறவர்களுமாகிய யாவரும் ஒருவராலே உண்டாயிருக்கிறார்கள். இதினிமித்தம் அவர்களைச் சகோதரரென்று சொல்ல அவர் வெட்கப்படாமல்.."**

தவறாகப் புரிந்து கொள்ளப்படுகின்ற மற்றொரு வசனம்

**ஏசாயா 9:6**

**"நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்.. அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப் பிரபு எனப்படும்"**

கர்த்தரைப்பற்றி , வல்லமையுள்ள தேவன் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், சர்வ வல்லமையுள்ள தேவன் அல்ல என்பதை நாம் உணரவேண்டும்.

**எபேசியர் 1:17**

**"நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் தேவனும் மகிமையின் பிதாவுமானவர் தம்மை நீங்கள் அறிந்து கொள்வதற்கான ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியை உங்களுக்குத் தந்தருள வேண்டுமென்றும்.."**

**எபேசியர் 1:3**

**"நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்"**

பரலோகப்பிதா சர்வ வல்லமையுள்ள தேவன் ஆவார். ஆனால் இயேசு வல்லமையுள்ள தேவன் என்று இங்கு குறிப்பிடப்படுகிறார். சில சமயங்களில் சாத்தானும் இப்பிரபஞ்சத்தின் தேவன்

என்று குறிப்பிடப்படுவதை காண்கிறோம்(2கொரிந்தியர் 4:4). **மோசேயும்கூட தேவன் எனப்படுகிறார்.**

**யாத்திராகமம் 7:1**

**"கர்த்தர் மோசேயை நோக்கி - பார் உன்னை நான் பார்வோனுக்கு தேவனாக்கினேன்.."**

அதுபோலவே இயேசுவும் வல்லமையுள்ள தேவன் ஆவார். ஆனால் அவர் சர்வ வல்லமையுள்ள தேவன் அல்ல.

மேலும் "நித்திய பிதா" எனும்போது அவருடைய இராஜ்யத்தில் மரித்த அனைவருக்கும் உயிர்த்தெழுதல் மூலம் நித்திய ஜீவனைத் தருவதால்(1கொரிந்தியர் 15:45) அவருக்கு நித்திய பிதா என்ற ஒரு பெயரும் மிகவும் பொருத்தமானதே. மார்த்தாளிடம் இயேசு, தாம் நித்திய ஜீவனை அளிக்கும் பிதாவாக இருக்கப்போவதாக கூறினதை வாசிக்கிறோம் -

**யோவான் 11:26**

**"உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான். இதை விசுவாசிக்கிறாயா என்றார்"**

திரித்துவ உபதேசத்தின் ஆதாரமாகக் கூறப்படும் மற்றும் ஒரு வசனத்தை ஆராயலாம்.

**யோவான் 14:7-9**

**"என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்"**

என்றால் நமது கர்த்தர் எவ்வாறு இவ்விதம் கூறுகிறார். உடனே அநேகர் இவரே அவர் என்று நம்பிவிடுகின்றனர். மேலும் இங்கும் இருவர்பற்றி மட்டுமே பேசப்பட்டுள்ளதை கவனிக்கவும். கர்த்தரின் சொந்த வார்த்தைகள் சிலவற்றை இவ்வசனத்தோடு பொருத்திப் பார்க்கவேண்டும். வசனம் 8ல், பிலிப்பு,

**"ஆண்டவரே பிதாவை எங்களுக்குக் காண்பியும், அது எங்களுக்குப் போதும் என்றான்"**

பிலிப்பின் வேண்டுகோள் நிறைவேற்ற முடியாதது. ஏனெனில், நாம் வேதத்தில் வாசிக்கிறோம்-

**1தீமோத்தேயு 6:16**

**"ஒருவராய் சாவாமையுள்ளவரும், சேரக்கூடாத ஒளியில் வாசம்பண்ணுகிறவரும், மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும், காணக்கூடாதவருமாயிருக்கிறவர்.."**

மேலும் இயேசு கூறுகிறார் -

**யோவான் 5:37**

**"நீங்கள் ஒருக்காலும் அவர் சத்தத்தை கேட்டதுமில்லை, அவர் ரூபத்தை கண்டதுமில்லை"**

**யோவான் 1:18**

**"தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை. பிதாவின் மடியிலிருக்கிற**

**ஒரே பேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார்"**

பிதாவாகிய தேவனை மனிதர்கள் காண முடியாது. அவ்வாறிருக்க இவ்வசனத்தின் பொருள் என்ன?

**எபிரேயர் 1:3**

**"இவர்(இயேசு) அவருடைய(பிதா) மகிமையின் பிரகாசமும் அவருடைய தன்மையின் சொரூபமாயிருந்து"**

**2கொரிந்தியர் 4:4** **"தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின்.."**

**கொலேசெயர் 1:15** **"அதரிசனமான தேவனுடைய தற்சொரூபமும்.."**

மேற்கண்ட பகுதிகளிலிருந்து தேவன் காணக்கூடாதவராக இருக்கும்போது, அவருடைய தன்மைகளை தன்னில் வெளிப்படுத்தும் சாயலான கிறிஸ்துவைக் காணும்போது, பிதாவையே காண்பதாக அங்கு விளக்குகிறாரே தவிர, பிதாவே மனிதராகிய இயேசுவாக வந்தார் என்றல்ல. இவ்வாறு பூரண மகிமையில் இருக்கும் இயேசு, பிதாவின் தற்சொரூபமாக மாத்திரம் இருக்கிறாரென்றால், பிதாவின் மகிமை எப்படிப்பட்டதாக இருக்கும் என்று கற்பனை செய்துபாருங்கள்.

**1யோவான் 1:1,2** **"ஆதிமுதல் இருந்ததும், நாங்கள் கேட்டதும், எங்கள் கண்களினாலே கண்டதும், நாங்கள் நோக்கிப்பார்த்ததும், எங்கள் கைகளினாலே தொட்டதுமாயிருக்கிற ஜீவ வார்த்தையைக் குறித்து உங்களுக்கு அறிவிக்கிறோம். அந்த ஜீவன் வெளிப்பட்டது. பிதாவினிடத்திலிருந்ததும், எங்களுக்கு வெளிப்பட்டதுமான நித்தியமாயிருக்கிற அந்த ஜீவனை நாங்கள் கண்டு, அதைக் குறித்து சாட்சி கொடுத்து, அதை உங்களுக்கு அறிவிக்கிறோம்"**

மேலும் கர்த்தர் மரியாள் வயிற்றில் பிறந்தபின்னரே அவருக்கு இயேசு என்று பெயரிடப்பட்டிருந்ததே தவிர, பரலோகத்தில் அவருக்கு இருந்த பெயர் வார்த்தை - லோகோஸ்(Logos)(வெளிப்படுத்தல் 19:13). அதாவது தேவனுடைய பிரதிநிதி அல்லது தேவன் சார்பாக பேசுபவர்(Spoke person of God).

இதற்கு ஆதாரமாக அநேக வசனங்கள் உண்டு.

மோசேக்கு முட்செடியில் காட்சியளித்தவர் யார்?

**யாத்திராகமம் 3:2**

**"அங்கே கர்த்தருடைய தூதனானவர் ஒரு முட்செடியின் நடுவிலிருந்து உண்டான அக்கினி ஜூவாலையிலே நின்று அவனுக்குத் தரிசனமானார்.."**

**யாத்திராகமம் 3:4**

**"அவன் பார்க்கும்படி கிட்ட வருகிறதை கர்த்தர் கண்டார். முட்செடியின் நடுவிலிருந்து தேவன் அவனை நோக்கி -**

**மோசே மோசே என்று கூப்பிட்டார்"**

இங்கு தேவனுடைய தூதர் மோசேயிடம் , தேவன்பேசுவதுபோலவே பேசினாரேயன்றி, தேவனே வரவில்லை.

**அப்போஸ்தலர் 7:35** **"உன்னை அதிகாரியாகவும் நியாயாதிபதியாகவும் ஏற்படுத்தினவன் யார்? என்று சொல்லி அவர்கள் மறுதலித்திருந்த இந்த மோசேயைத்தானே தேவன் முட்செடியில் அவனுக்குத் தரிசனமான தூதனாலே, தலைவனாகவும் மீட்பனாகவும் அனுப்பினார்"**



இவ்விதமாக இங்கு தூதன் தேவனுடைய பிரதிநிதியாக

அது மாத்திரமல்ல, **யாத்திராகமம் 23:20,21ல்,**"கர்த்தருடைய தூதன்" இஸ்ரயேல் ஜனங்களை வனாந்தரத்தில் நடத்திச்சென்றதாக வாசிக்கிறோம். யார் அந்த தூதன்?

**1கொரிந்தியர் 10:4** **"எப்படியெனில், அவர்களோடு கூடச் சென்ற ஞானக்கன்மலையின் தண்ணீரைக் குடித்தார்கள். அந்தக் கன்மலை கிறிஸ்துவே"**



**1கொரிந்தியர் 10: 9**

**"அவர்களில் சிலர் கிறிஸ்துவைப் பரீட்சை பார்த்தார்கள்"**

என வாசிக்கிறோம். ஆகவே மற்றுமொரு இடத்தில் மோசேயைப்போல் தேவனை முகமுகமாய் கண்டவர் யாருமில்லை என்றால், தேவனுடைய வழிநடத்துதலை நன்கு அறிந்தவர் வேறுயாருமில்லை என்பதே பொருள். மேலும் தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவையே மோசே கண்டார்.

**யோபு 33:22-24**

**"ஆயிரத்தில் ஒருவராகிய சாமாகி**(Mediator) **பண்ணுகிற தூதனானவன் - மீட்கும்பொருளை கண்டுபிடித்தேன் என்பார்"**

என்றால் யார் அந்த தூதர்? நம் கர்த்தர் இயேசு அல்லவா?

**1தீமோத்தேயு 2:5,6**

**"எல்லாரையும் மீட்கும்பொருளாக தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே".**

நாம் வேத வசனங்களின் மூலம் மூன்று தூதர்களின் நாமங்களை அறிவோம். காபிரியேல் மிகாயேல் மற்றும் லூசிபர். இதில் சாத்தானாக மாறின லூசிபரையும், இயேசு




பிறக்கப்போகிற செய்தியை மரியாளுக்கு தெரிவித்த காபிரியேலையும் நாம் அறிவோம். பின்பு மிகாயேல் தூதர் யாரைக் குறிக்கிறார்? அது குறித்து

**யூதா 9**

**"பிரதான தூதனாகிய மிகாயேல் மோசேயினுடைய சரீரத்தைக்குறித்துப் பிசாசுடனே தர்க்கித்துப் பேசினபோது அவனைத் தூஷணமாய்க் குற்றப்படுத்தத் துணியாமல், கர்த்தர் உன்னைக் கடிந்துகொள்வாராக என்று சொன்னான்"**

இவர் ஒரு பிரதான தூதன் என்று அழைக்கப்படுகிறார். காபிரியேல் லூசிபர் போன்ற எந்த தூதரும் பிரதான தூதன் என்று அழைக்கப்பட்டதில்லை. அப்படியிருக்க, பிரதான தூதனாகிய மிகாயேல் யார்?

**1தெசலோனிக்கேயர் 4:16**

**"ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும் பிரதான தூதனுடைய சத்தத்தோடும் , தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்.அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்"**

நம் கர்த்தராகிய இயேசுவே பிரதான தூதனாகிய மிகாயேலாகவும் இருக்கிறார். இதை உறுதிப்படுத்த இன்னுமொரு வசனத்தையும் பார்க்கலாம் -

**தானியேல் 12:1**

**" உன் ஜனத்தின் புத்திரருக்காக நிற்கிற பெரிய அதிபதியாகிய மிகாயேல் அக்காலத்திலே எழும்புவான். யாதொரு ஜாதியாரும் தோன்றியது முதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும். அக்காலத்திலே புஸ்தகத்தில் எழுதியிருக்கிறவர்களாகக் காணப்படுகிற உன் ஜனங்கள் அனைவரும் விடுவிக்கப்படுவார்கள்"**

தானியேலின் ஜனங்கள் இஸ்ரயேலரே. அவர்கள் மேசியாவை எதிர்பார்த்து காத்திருக்கிறார்கள். அந்த மேசியா நம் கர்த்தராகிய இயேசுவே என்றும், அவரே இங்கு மிகாயேல் - அதாவது பரலோகத்தின் பெரிய அதிபதி என்றும் குறிப்பிடப்படுகிறார்.பிரதான தூதர் என்றால் ஏதோ சாதாரண தூதராக எண்ணக்கூடாது. இவ்வார்த்தை நம் கர்த்தருக்கு மட்டுமே பொருந்தும். எவ்வாறெனில் பிரதம மந்திரி என்பது ஒரே ஒருவருக்கு மட்டுமே பொருந்தும். அதேபோல இயேசு பரலோகத்தில் பிரதான தூதனாக என்றால் அண்ட சராசரம் முழுவதிற்கும் அதிகாரமுடையவராக, சுதந்திரவாளியாக தேவனுக்கு அடுத்தபடியாக அவருடைய மகிமையை யோசித்துப் பாருங்கள் அன்பான சகோதர சகோதரிகளே.

**ஏசாயா 63:9**

**"அவருடைய சமூகத்தின் தூதனானவர் அவர்களை இரட்சித்தார்...பூர்வ**

**நாட்களிலெல்லாம் அவர்களை தூக்கிசுமந்துவந்தார்"**

என்று பார்க்கிறோம்.

இயேசுவின் மற்றொரு நாமத்தைக் குறித்து வாசிப்போம் -

**வெளிப்படுத்தல் 22:16**

**"சபைகளில் இவைகளை உங்களுக்குச் சாட்சியாக அறிவிக்கும்படிக்கு இயேசுவாகிய நான் என் தூதனை அனுப்பினேன். நான் தாவீதின் வேரும் சந்ததியும், பிரகாசமுள்ள விடிவெள்ளி நட்சத்திரமுமாயிருக்கிறேன் என்றார்"**

விடிவெள்ளி நட்சத்திரம் என்பதன் பொருளை நாம் காணலாம். "விடிவெள்ளி" - ஒரு நாளின் துவக்கத்தைக் குறிக்கிறது. அல்லது தேவனுடைய சிருஷ்டிப்பின் துவக்கத்தைக் குறிக்கிறது. "நட்சத்திரம்" - தேவனுடைய நேரடி சிருஷ்டிப்பில் விசேஷமான துவக்கமாக இயேசு இருப்பதைக் குறிக்கிறது. வேத வசனங்களில் வேறொரு விடிவெள்ளி நட்சத்திரமும் சொல்லப்பட்டிருக்கிறது

**ஏசாயா 14:12**

**"அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளியே.."**

இதன் பொருள் என்ன?

நாம் ஏற்கனவே பார்த்தபடி, தேவன் இயேசுவை சிருஷ்டித்தபின்புதான் மற்ற எல்லா சிருஷ்டிப்புகளையும் இயேசுவைக்கொண்டு சிருஷ்டித்தார் என பார்த்தோம். அவ்வகையிலும், முதல் சிருஷ்டி அதாவது கிறிஸ்து மூலம் உருவாக்கப்பட்ட முதல் சிருஷ்டி "லூசிபர்". இவரே பின் "சாத்தானாக" மாறியவர். அதனாலேயே இவரும் விடிவெள்ளி எனப்படுகிறார். ஆயிரவருட அரசாட்சியில் கிறிஸ்து இவ்வுலகின் இராஜாவாக வரும்போது, அவருடைய மகிமையை உலகமக்கள் அனைவரும் அறிவர்-**பிலிப்பியர் 2:8-11, மத்தேயு 28:18**.

இறுதியாக, இயேசு மெய்யான தேவனைப்பற்றிய அறிவைப்பெற்று, நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். அந்த மெய்யான தேவன் யார்?

**யோவான் 17:3**

**"ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும், நீர் அனுப்பினவராகிய இயேசுகிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்"**

ஆக, இப்பாடத்தின்மூலம் நம் கர்த்தர் தேவனுடைய ஒரேபேறான குமாரன், அவருடைய மகிமை, வேதத்தில் அவருடைய முக்கியத்துவம் முதலியவற்றை தெளிவாக ஆராய்ந்தோம். அடுத்த பாடத்தில் பிதாவாகிய தேவன் குறித்து ஆராய்வோம்.

**தேவன் தாமே நமக்கு கிருபை செய்வாராக ஆமென்.**